


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## அக்டோபர் - 22.10.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்












## தமிழக நிகழ்வுகள்

- துப்புரவு, குடிநீர், சுகாதாரம், குழந்தைகள் நலம், மகப்பேறு ஆரோக்கியம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றை சிறப்பான முறையில் செயல்படுத்தியதற்காக நீலகிரி மாவட்டமானது **JRD டாடா நினைவு விருதைப் JRD Tata Memorial Award** பெற்றுள்ளது.
    - இந்த விருதானது 1997 ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்படும் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களை கவுரவிப்பதற்காக இந்திய மக்கள் தொகை நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.

## இந்திய நிகழ்வுகள்

- கர்நாடகாவின் பெங்களுருவில் உள்ள கெம்ப் போர்ட் மாலில் இந்தியாவின் முதல் இணைய சங்கேதப் பணத்திற்கான ATM **(India's First Bitcoin ATM)** திறக்கப்பட்டுள்ளது.
    - இந்த ATM ஆனது வாடிக்கையாளர்களுக்கு குறைந்த பட்சம் ரூ.1000 அளவுக்கு செலுத்தவும் பெறவும் மற்றும் மற்ற இணைய சங்கேதப் பணங்களான பிட்காயின், ஈத்தரம் மற்றும் பல்வேறு பரிமாற்றம் செய்யவும் அனுமதிக்கிறது.

- சுற்றுச்சூழல் மாசுபாடு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆணையமானது **(EPCA – Environment Pollution Prevention and Control Authority)** தேசியத் தலைநகரான டெல்லி பிராந்தியங்களில் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்துவதற்காக ஒரு தரப்பட்ட பதில் செயல் திட்டத்தை **(GRAP – Graded Response Action Plan)** செயல்படுத்தத் தொடங்கியது.
- குறிப்பு
    - புது தில்லியின் தற்போதைய முதல்வர் - அரவிந்த் கெஜ்ரிவால்
    - புது தில்லியின் துணை நிலை ஆளுநர் - அனில் பைஜால்

- பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், முன்னாள் குடியரசுத் தலைவர் மற்றும் ஏவுகணை நாயகரான **டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் 87வது** பிறந்த நாளை முன்னிட்டு (2018 அக்டோபர் 15) **கலாமின் பார்வை – கனவிற்கான தைரியம்** என்ற கருத்தின் அடிப்படையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு


We Shine Academy™

மையத்தின் இணைய தளத்தை நாட்டிற்காக அர்பணித்துள்ளார்.

## உலக நிகழ்வுகள்

- டிசம்பர் மாதம் சீனாவின் செங்டு பகுதியில் **இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையே Hand – in – Hand (ஹேண்ட் - இன் - ஹேண்ட்)** இராணுவப் போர் பயிற்சியின் 7-வது பதிப்பு மீண்டும் தொடங்கவுள்ளது. 2017 ஆம் ஆண்டில் டோக்லாம் சிக்கலுக்கு பிறகு இந்த வருடாந்திரப் பயிற்சியானது ரத்து செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- சமூக தொழில் முனைவரான **சுஹைல் F.தாண்டன்,** சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் விளையாட்டு மற்றும் சமூக செயற் சங்க குழுவின் கிராண்ட் விருதினை தனது விளையாட்டு அபிவிருத்திற்கான பங்களிப்பிற்காக வென்றுள்ளார்.
    - இவர் ப்ரோ ஸ்போர்ட் டெவலப்மெண்ட் **(PSD –PRO Sport Development)** நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் மார்த்தா ∴பரேல் பவுண்டேசனின் இயக்குநர் ஆவார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- சீனாவில் நகர்புறங்களில் மின்சாரச் செலவினங்களைக் குறைப்பதற்காக தெரு விளக்குகளுக்குப் பதிலாக, மனிதனால் உருவாக்கப்படும் செயற்கைச் **சந்திரனை, ஜீசாங் சாட்டிலைட் லாஞ்ச்** சென்டரிலிருந்து சீனாவானது 2020ம் ஆண்டு அறிமுகப்படுத்த உள்ளது.
    - இந்த செயற்கை நிலாவானது உண்மையான நிலவுடன் சேர்ந்து வெளிச்சம் பாய்ச்சும். இவை நிலவைக் காட்டிலும் 8 மடங்கு வெளிச்சம் உள்ளதாக இருக்கும் என சீன ஊடகம் தெரிவித்துள்ளது.

## விருதுகள்

- **அண்ணா ப்ரன்ஸ்(Anna Burns)** என்பவர் தனது மில்க்மேன் என்ற புதினத்திற்காக புனைவுக் கதைகளுக்கான பெருமை மிகு **மேன்புக்கர் பரிசினை** வென்றுள்ளார்.
    - உலகம் முழுவதிலும் உள்ள ஆங்கில மொழி நூலாசிரியர்களுக்கான இந்தப் பரிசினை வடக்கு அயர்லாந்தைச் சேர்ந்த ஆசிரியராக முதலில் வெல்வது இவரேயாவார்.

## முக்கிய தினங்கள்

- **தேசிய காவலர் நினைவு தினம் (National Police Commemoration Day-NPCD) – அக்டோபர் 21**
    - 1959ம் ஆண்டு லடாக் பகுதியில் சீன படையினரால் கொல்லப்பட்ட காவலர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் அக்டோபர் 21ம் நாள் காவலர் நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது.
    - இந்நாளின் நினைவாக பிரதமர் மோடி டெல்லியில் அமைக்கப்பட்ட காவலர் அருங்காட்சியகத்தை நாட்டிற்கு அர்ப்பணித்துள்ளார்.
- குறிப்பு
    - தமிழகத்தில் காவலர் அருங்காட்சியகம் (Police Museum) கோயம்புத்தூரில் உள்ளது